*1981 ஏப்ரல் 3]*

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நாடுகளில் வேலை தேடித் தருகின்ற நிறுவனத்தில் ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதுவரையில் வெளிநாடுகளில் எத்தனை பேர்களுக்கு இந்த நிறுவனம் வேலை வாங்கித்தந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு செப்டம்பரில் முதலிலே 19 பேர்களை ஐக்கிய அரபுக் குடியரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. 1979ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 17 பேர்களில் அபுதாபிக்கு அனுப்பி வைத்திருக்கிறது. 1981 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 70 பேர்களை ஈராக் நாட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஆக மொத்தம் 106 பேர்களை இதுவரையில் அனுப்பிவைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் சோம்தத் பில்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் 102 பேர்கள் தேர்ந்தெடுக்கபபட்டிருக்கிறார்கள். அவர்கள் கூடிய விரைவில் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே வேலை கிடைப்பதைத் தமிழ்நாட்டு மக்கள் முழு அளவிலே பயன்படுத்திக்கொள்கிற வாய்ப்புக்களை நல்ல முறையிலே ஏற்படுத்துவதற்காகவும்—வேறு சில மாநிலங்களிலே அந்த அந்த மாநிலங்களுடைய மக்களுக்கு வாழ்வு கொடுக்கிற வகையிலே அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள்—அதைப்போன்று வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், பல்வேறு வெளிநாடுகளுக்கு தனியார்கள் ஏஜென்சி மூலமாக அதிக ஆட்கள் எடுக்கப்படுகின்ற வாய்ப்பு, சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அப்படி தனியார்கள் ஆட்கள் எடுப்பதை முறைப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு, ரிஜிஸ்டர் செய்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்கின்ற முறையிலே நடவடிக்கை எடுத்து தனியார்களும் ஆட்களை எடுத்து அனுப்புகிற வாய்ப்புக் குறைந்துவிடாமல் அது மங்காமல் இருக்கின்ற வகையிலே அரசு அவைகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான முயற்சிகளிலே ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தனியார்கள் நடத்துகின்ற அந்த நிறுவனங்களை முற்றிலும் அகற்றிவிடவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று ஒழுங்குபடுத்த சில மாற்றங்களைச் செய்ய அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலம்பாடியிலுள்ள நடுநிலைப்பள்ளி.

*வினா எண் 629—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் ஆலம்பாடியிலுள்ள அரிசன நல இலாகாவால் நடத்தப்படும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுமாறு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜே. எஸ். இராசு :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த ஆலம்பாடியிலே இயங்குகின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்ற கோரிக்கை 1980ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாகவே தரப்பட்டது. இல்லை என்ற பதிலை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எப்படியிருப்பினும், 6ஆவது ஐந்தாண்டுக் திட்டக் காலத்தில் ஆதிதிராவிட நல இலாகாவால் ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மாற்றுவதற்குத் திட்டம் இருப்பதாக அறிக்கை இருக்கிறது. அந்த வாய்ப்பையாவது பயன்படுத்தி ஆலம்பாடி கிராமத்திலே உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வருகிற ஜூன் மாதத்திலே கல்வியாண்டிலிருந்து கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் மிக அருகிலேயே பெரம்பலூரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ஜே. எஸ். இராசு :** ஆலம்பாடி கிராமத்திலே கிழக்கே பெரம்பலூர் செல்லவேண்டுமானால் இடையிலே கோனேரி பாளையம் ஆறு இருக்கிறது. மழைக்காலங்களிலே மாணவ மாணவியர்கள் சென்று வர முடியாது. குரும்பலூர் என்ற இடத்திற்குச் செல்லவேண்டுமென்றாலும் அதே ஆறு இடையிலே வருகிற பகுதி இருக்கிறது, ஆகவே மாணவ மாணவியர் மழைக் காலங்களிலே போய் வரமுடியாது. 50 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறுகிற பள்ளியாக அந்தப் பள்ளியிருப்பதால் நிறைய மாணவர்கள், மாணவியர்கள் அதே கிராமத்தில் இருக்கிறார்கள், இடையிலே ஆறுகள் இருப்பதால் மாணவர்கள் மாணவியர்கள் போகமுடியாத நிலைமையில் சிரமப்படுகிறார்கள். எனவே

தனியாகப் பரிசீலித்து அரசாங்கமே விதிவிலக்கு கொடுத்து உயர்நிலைப் பள்ளி உருவாக்கலாம் என்ற விதி அரசாங்கத்திலே இருக்கிறது, அதைப் பயன்படுத்தி அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவரவர்களே, அரசு இது குறித்துப் பரிசீலிக்கும்.

காங்கேயத்திலுள்ள அரிசன நல தாசில்தார் அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

***வினா எண் 630.—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை பவானி மற்றும் தாராபுரம் வட்டங்களுக்கான அரிசன தாசில்தார் அலுவலகம் காங்கேயத்தில் உள்ளதை அரிசன மக்களின் நலன் கருதி பெருந்துறைக்கு மாற்றும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இல்லை.

[முற்பகல் 10-20]

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலிருந்து பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின் வேலை அதிகமாயிருக்கிறது என்று இந்த அரிசன நலத்துறை அலுவலகம் மாவட்டத்தில் ஒரு ஓரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அரிசன நல மக்களின் நலன் கருதி, இது மையமாக இருக்கின்ற பெருந்துறைக்கு மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆறு வட்டங்கள் உள்ளன. அங்கே இருக்கின்ற மூன்று தனி வட்டாட்சியர்கள், ஒவ்வொருவருக்கும் இரண்டு இடங்கள் என்ற விகிதத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டு, பெருந்துறையையும் தாராபுரத்தையும் ஒரு வட்டாட்சியர் கவனித்து வருகின்றார். அந்த வட்டாட்சியருடைய அலுவலகம் காங்கேயத்தில் இயங்கி வருகிறது. பெருந்துறைக்கும், தாராபுரத்திற்கும் இடையே இருக்கின்ற தூரம் சுமார் 70 கிலோ மீட்டர். ஆனால் தற்போதுள்ள இந்தக் காங்கேயம் பகுதி, பெருந்துறைக்கும் தாராபுரத்திற்கும் மத்தியில் 35 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.